# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை

# நேரம் வினா எண் 333, தலைப்பு "சரியான வாழ்க்கை பாதை"

# நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார்

அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 129-135 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி இந்த காலத்திற்கு ஏற்றார் போல் நாங்கள் பின்பற்றுவதற்கு நல்லதொரு ஆன்மீக பாதையை தயவுசெய்து காட்டியருளுங்கள் ஸ்வாமி. ஏனென்றால் இன்றைய கால கட்டம் மனதை கெடுக்கின்ற பல தீமைகள் நிறைந்ததாக இருக்கிறது.

ஸ்வாமியின் பதில்:
இறைவனுடைய சிருஷ்டியிலே மிகவும் விலை மதிப்பற்றவன் மனிதன். எனவே மனித பிறவியின் மதிப்பை உணர்ந்து நீங்கள் வாழ்க்கை நடத்தவேண்டும்.
மதிய உணவு தயாரிக்கும் போது அதில் உப்பை அதிகமாக சேர்த்து விட்டால் உணவு பாழாகிவிடுகிறது அல்லவா.ஒரு சாதாரண உணவிற்கே இப்படி என்றால் நீண்ட நெடிய வாழ்க்கையில் சுவை கெடாமல் பார்த்து கொள்ள வேண்டும்.
அலுவலகம் செல்ல காத்திருக்கும் போது பஸ் வர தாமதமானால் கொந்தளித்து அனைவரையும் குற்றம் சொல்கிறோம்.அது போல் மனித குணங்களை விடுத்து பல முறை வாழ்க்கையில் மிருகம் போல் நடந்து கொள்கிறோமே.
அப்போது இந்த சமுதாயம் எப்படி கொந்தளிக்கும்.
மனிதன் 85 விழுக்காடு தெய்வீக இயல்புகள் கொண்டவன்.விலங்குகளோ வெறும் 15 விழுக்காடு மட்டுமே தெய்வீக இயல்புகள் கொண்டவை.
மனிதனால் மட்டுமே தெய்வீகத்தை உணரவும் தெய்வானந்தத்தை அனுபவிக்கவும் முடியும். எப்படி மேலே எறியப்பட்ட கல் கண்ணுக்கு தெரியாத புவி ஈர்ப்பு சக்தியினால் கீழே விழுகிறதோ அது போல் நற்குணங்கள் மனிதனை வழி நடத்த வேண்டும்
ஒரு இயந்திரத்தை பயன்படுத்தாமல் அப்படியே போட்டு விட்டால் அது துருப்பிடித்து பாழாகி விடுகிறது.பிறகு அதை பட்டறையில் கொடுத்து பழுது பார்த்து பின் உபயோகிக்க வேண்டியுள்ளது.
அது போல் மனித மனங்களில் தீய எண்ணங்கள் என்ற தூசு பரவுமானால் அது துருப்பிடித்து இறை நம்பிக்கை இல்லாததாக

ஆகிவிடும்.அப்போது அதை சரணாகதி என்ற பட்டறையில் கொடுத்து நம்பிக்கை ஊட்டி சரி செய்யப்பட வேண்டும்.

எனவே ஒரு போதும் நீங்கள் மனித பண்புகளை கடைபிடிக்க தவறி விட கூடாது.அகந்தை இருக்கும் வரை எந்த ஒரு ஆன்மீக சாதனையும் பயனளிக்காது.
அஹம் தேஹோஸ்மி என நினத்தால் இலக்கை அடைய முடியாது
ராவணன் கம்சன் பஸ்மாஸூரன் இவர்களெல்லாம் இப்படி பட்டவர்களே.
சிலர் மதம் மாறுகிறார்கள்.மாற வேண்டியது உங்கள் மதியே அன்றி மதமல்ல.
நீங்கள் அடிப்படையில் அன்பே வடிவானவர்கள்.
அதாவது அனைத்திலும் அன்பை உணர்ந்து அனுபவிப்பது தான் மனித இயல்பு.
ஒரு முறை ஸ்ரீ கிருஷ்ணர் யசோதா அம்மாவிடம் காட்டுக்கு பசுக்களை ஓட்டி சென்று மேய்த்து வர அனுமதி கேட்டார்.காட்டுப் பாதை கற்களும் முள்ளும் கொண்டதாக இருக்கும்.எனவே நீ நாளைக்கு போ.அதற்குள் நான் உனக்கு காலணி தயார் செய்து விடுகிறேன் என யசோதா கூறினார்.பசுக்களுக்கு கூட காலணி இல்லையே.அவை மட்டும் கல்லில் நடந்து கஷ்டப்படாதா என கிருஷ்ணர் கேட்டார்.அவை மிருகங்கள்.நாம் மனிதர்கள் என யசோதா கூறினார்.பசுக்கள் மனிதர்களை விட நன்றி உணர்வு கொண்டவை.அவை தம் ரத்தத்தை பாலாக்கி நமக்கு தருகின்றன.நான் அழைத்தால் புரிந்து கொண்டு ஓடி வருகின்றன
அவை மனிதர்களை விட உயர்ந்தவை என்றார் ஸ்ரீ கிருஷ்ணர்.
பசுக்கள் தியாகத்திற்கும் பொறுமைக்கும்அடையாளமாகும்.அது போன்ற உன்னத பண்புகளை ஆன்மீக சாதகர்கள் வளர்த்து கொள்ள வேண்டும்.
விவசாயம் செய்வதற்கு நிலத்தை உழுது களை எடுத்து உரமிட்டு நீர் பாய்ச்சி விதை விதைக்க வேண்டும்.
மனித மனமும் ஒரு வயல் தான்.
அந்த வயலை ஆத்ம விசாரணையால் உழுது தீய எண்ணங்களை களை எடுத்து அன்பெனும் நீர் பாய்ச்சி ஒழுக்கமென்னும் வேலியிட்டு பாதுகாத்து ஆனந்தமென்னும் பயிரை விளைவிக்க வேண்டும்.

ஆரஞ்சு பழத்தை கசப்பான தோலி தான் மூடியிருக்கிறது.
அதை உரித்தால் விதைகளும் கடினமான நார் பகுதியும் இருக்கிறது.அதற்கும் உள்ளே தான் சுவையான பழமும் ஆரஞ்சு சாறும் இருக்கிறது.
அது போலவே அகந்தை என்னும் தோலை நீக்கி தீய எண்ணங்கள் அதனால் உண்டாகின்ற தீய செயல்கள் என்னும் விதைகளையும் பந்த பாசமாகிய நார் பகுதியையும் எடுத்து விட்டால் அன்பெனும் இனிய பழ ரசத்தை சுவைக்கலாம்.

கம்பியில் மின்சாரம் செல்வதற்கு நேர்மறை மற்றும் எதிர்மறை ஒயர்கள் இரண்டும் தேவை.எதிர் மறை மிகவும் சக்தி கொண்டதாக இருக்கலாம்.ஆனால் நேர்மறையுடன் சேராவிட்டால் பயன் இல்லை.
மின் விசிறியும் மின் விளக்கும் மிக தரம் வாய்ந்ததாக இருக்கலாம்.ஆனால் மின்சாரம் இல்லை என்றால் பயனில்லை.இங்கே மின்சாரம் என்பது நேர்மறை.தெய்வீகம் என்பதும் நேர்மறை.உங்களிடம் அன்பெனும் நேர்மறை சக்தி இருந்தால் தான் ஆன்மீக சாதனைகளில் வெற்றி கிட்டும்.அதற்கு உங்கள் மனதை பண்படுத்தி கொள்ள வேண்டும்.இன்றைய காலத்தில் யாரும் அப்படி செய்வதில்லை.
கல்லில் சிலை வடிக்கலாம்.உமியிலிருந்து தானியத்தை பிரிக்கலாம்.
கஷ்டங்கள்,துன்பங்கள்,துயரங்கள் எல்லாம் உங்களை பண் படுத்துவதற்காகவே.உங்களை ஆன்மீக பாதையில் மேல் நோக்கி எடுத்து செய்வதற்காகவே.நீங்கள் கஷ்டங்களை எதிர் கொண்டு ஆன்மீக பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டும்.அனுபவங்களின் மூலமாக நம்பிக்கையை வளர்த்து கொள்ளுங்கள்
நீங்கள் மற்றொருவருக்காக சுவாசிக்க முடியுமா.மற்றொருவரின் கண்களின் மூலமாக நீங்கள் காட்சிகளை காண முடியுமா.ஆன்மீக பாதையில் உங்கள் சொந்த கால்களை கொண்டு நீங்கள் நிற்க வேண்டுமே தவிர மற்றவர்களை சார்ந்து அல்ல.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி சில சமயங்களில் நம்மை சுற்றி உள்ளவர்களின் வசதியான வாழ்கை முறையை கண்டு நாமும் அது போல் செழிப்பான வாழ்கை முறைக்கு மாறி விடலாமே என எண்ண தோன்றுகிறது.செழிப்பான வசதியான வாழ்க்கைக்கு ஆசைபட்டு விடுவோமோ என அச்சமாக இருக்கிறது.இதை மாற்றி கொள்ள என்ன செய்ய வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இப்படி தோனறுவது நியாயமல்ல.இது உங்களுடைய பலஹீனத்தை காட்டுகிறது.உங்களுடைய நம்பிக்கையும் நற்பண்புகளும் உறுதியானதாக இருந்தால் யாராலும் உங்களை எப்போதும் மாற்ற முடியாது. மாறாக உங்களின் நற்பண்புகளும் நம்பிக்கையும் திடமானதாக இல்லாததால் அப்படி தோன்றுகிறது.
எந்த சூழ்நிலையிலும் நீங்கள் அறம்சார் ஆன்மீக பாதையிலிருந்து பிறழக்கூடாது.
யாராவது உங்களிடம் வந்து கடவுள் இல்லை என்று சொன்னால் எனக்கு கடவுள் உண்டு.அது என் நம்பிக்கை.அதை மறுப்பதற்கு நீ யார்.உனக்கு எந்த உரிமையும் இல்லை என கூறுங்கள்.உங்களுடைய நிலைப்பாட்டை நீங்கள் மாற்றி கொள்ள கூடாது.
ஒரு முறை மைத்ரேயி வனவாத்தில்
பாண்டவர்கள் காம்யவனத்தில் துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என கேள்வி பட்டு மன வேதனை அடைந்தார்.நல்லவர்கள் இந்த

உலகத்தில் எப்போதும் கஷ்டப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பது தான் விதியோ என நினைத்தார்.கிளி கூண்டில் அடைபடுகிறது.
ஆனால் காகமோ சுதந்திரமாக பறக்கிறது என எண்ணினார்.இதற்கு அர்த்தம் நாமும் காகம் போல் வாழ்கை நடத்த வேண்டும் என்பதல்ல.காகத்தை விட கூண்டு கிளி எவ்வளவோ மேல் அல்லவா.அல்லது காகம் தான் கிளியாக ஆகி விட முடியுமா.எதற்காகவும் அறம் சார் ஆன்மீக பாதையை மாற்றி கொள்ள கூடாது.
இராணுவத்தில் சிப்பாய்கள் நிறைய பேர் இருக்கலாம்.ஆனால் தளபதி ஒருவரே.ஒரு குழுவில் பலர் இருந்தாலும் குழு தலைவர் ஒருவர் மட்டுமே.அவர்களே மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்கள்.
உங்கள் ஆன்மீக பாதையை விட்டு நீங்கள் விலகாமல் இருந்தால்தான் இது சாத்தியமாகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்.